**மே – 31**

# TNPSC துளிகள்

- தற்போதைய மாலி குடியரசிற்கான இந்திய தூதர் பிரதீப் குமார் சின்கா கூடுதலாக, மாலியின் பாமகோ நகரில் இருப்பிடத்தைக் கொண்டு, மௌரிடானியா இஸ்லாமியக் குடியரசிற்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## பிரஸ்தான் பயிற்சி

- இந்தியக் கடற்படை மும்பையின் மேற்கு கடற்கரை வளர்ச்சிப் பகுதியில் பிரஸ்தான் என்றழைக்கப்படும் பயிற்சியை நடத்தியது.
- இந்தப் பயிற்சி மேற்குக் கடற்படைப் பிரிவின் தலைமையகத்தால் நடத்தப்பட்டது.




- 6 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்தப் பயிற்சி கடற்சார் பங்குதாரார்களான கடற்படை, கடலோரக் காவல்படை, விமானப்படை, சுங்கம் மற்றும் துறைமுகத் துறை, ஓஎன்ஜிசி ஆகிய அனைவரையும் ஒருங்கிணைக்கத் திட்டமிடுகிறது.
- எண்ணெய் பகுதிகளின் மீதான தீ, எண்ணெய் கசிவு, விபத்தில் சிக்கிய ஹெலிகாப்டர்களை தேடி மீட்கும் பணி ஆகியவற்றின் மீது பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

# சர்வதேசச் செய்திகள்

## அயர்லாந்து கருக்கலைப்பிற்கான வாக்கெடுப்பு

- அயர்லாந்து வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பங்கு வாக்காளர்கள் கர்ப்பக் காலத்தின் முதல் 12 வாரங்களில் கருக்கலைப்புச் செய்திடுவதற்கு ஏதுவாக

வாக்களித்துள்ளனர்.

- இறுதி முடிவுகளில் 66.4 சதவிகிதம் மாற்றத்திற்கு ஆதரவாகவும், 33.6 சதவிகிதம் எதிராகவும் இருந்தன.





- இந்த வாக்கெடுப்பு அயர்லாந்தின் கருக்கலைப்பு சட்டங்களை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலகின் பெரும்பான்மையான பகுதிகளில் உள்ள சட்டங்களுக்கு ஒத்துப் போவதாய் மாற்றும்.
- அதன் அண்டை நாடான வடக்கு அயர்லாந்து இன்றும் கருக்கலைப்பிற்கான நடைமுறையில் முழுமையான தடையைக் கொண்டுள்ளது.
- இந்த வாக்கெடுப்பு, 1983ம் ஆண்டு கத்தோலிக்க தேவாலயங்களின் வற்புறுத்தலுக்கு இணங்க எட்டாவது சட்ட திருத்தமாக அயர்லாந்தின் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- இந்த திருத்தம் பெண்ணிற்கும், அவளின் பிறக்காத குழந்தைக்கும் சம உரிமைகளை வழங்குகிறது.
- அயர்லாந்தின் பிரதமர் லியோ வரத்கார் இந்த வருட இறுதிக்குள் புதிய கருக்கலைப்புச் சட்டம் ஏற்படுத்தப்படும் எனக் கூறியுள்ளார்.
- இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டம், கர்ப்பக் காலங்களில் முதல் 12 வாரங்கள் வரையிலும், சில விதிவிலக்கான தருணங்களில் 24 வாரங்கள் வரையிலும் கருக்கலைப்பை அனுமதித்திடும்.

## வட கொரியாவில் அணு ஆயுதங்களை நீக்குதல்

- வடகொரியா தனது அணு ஆயுத சோதனைக் களத்தை அழித்துள்ளது.
- பியாங்யாங், தமது நாட்டின் வடகிழக்கில் உள்ள புங்கையி-ரி சோதனைக் களத்தை முழுமையாக அழிக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த அழிப்பினை கண்டிட சில வெளிநாட்டு பத்திரிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.
- புங்கையி-ரி சோதனைக் களம், சீனாவின் எல்லைக்கு அருகே அமைந்துள்ள வடக்கு ஹம்தியாங் மாகாணத்தில் மலைக்கு உள்ளே புதைந்துள்ள வடகொரியாவின் ஒரே சோதனைக் களமாக அறியப்படுகிறது.

## பாகிஸ்தானின் இடைக்கால பிரதமர்

- ஜூலை 25ம் தேதி நடைபெற உள்ள பொதுத் தேர்தல் வரையிலான கால கட்டத்திற்கு காபந்து பிரதமராக பாகிஸ்தானின் முன்னாள் தலைமை நீதிபதி நசீர் உல் முல்க் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாகிஸ்தானின் இடைக்கால தலைமை தேர்தல் ஆணையராகவும் பணியாற்றியுள்ள முல்க், தற்போதைய அரசாங்கமும் பாராளுமன்றமும் கலைக்கப்படுவதால், அடுத்த தேர்தல் நடைபெறும் வரை ஒரு தொழில்நுட்பமான அரசாங்கத்தை தலைமை தாங்கி நடத்துவார்.



- இந்த அறிவிப்பு சில வாரங்களாக பாகிஸ்தானின் ஆளும் கட்சியான பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-நவாஸ் கட்சியைச் சேர்ந்த ஷாகி கைகான் அப்பாசிக்கும், எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சையத் குர்ஷித் அகமது ஷாவிற்கும் இடையே நடந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.
- தற்போது பதவியிலிருந்து விலகும் ஷாகித் கைகான் அப்பாசி அரசாங்கம் தான் ஐந்து ஆண்டுகால பதவிக் காலத்தை முறையாக முடித்து ஜனநாயக ஆட்சி மாற்றத்தை குறிப்பிடுவதில் இரண்டாவது தடவையாகும்.
- தமது 70 ஆண்டு கால வரலாற்றில் பாகிஸ்தான் நாடு 2013ம் ஆண்டு அப்போதைய பொதுத் தேர்தல்களில் வென்ற பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-நவாஸ் கட்சியிடம் பாகிஸ்தான் மக்கள் கட்சி அதிகாரத்தை கைமாற்றியதே அந்நாட்டின் முதல் ஜனநாயக அதிகார மாற்றமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் தலைமை நிதி அலுவலர்

- தேசிய பங்கு முதலீட்டு நிறுவனத்தின் அதிகாரியான சுதா பாலகிருஷ்ணன் இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் தலைமை நிதி அலுவலராக (Chief Financial Officer - CFO) நியமிக்கப்பட்டுள்ளார்.

- இவர் ரிசர்வ் வங்கியின் 12வது செயல்முறை இயக்குநராக 3 ஆண்டுகள் என்ற பதவிக் காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.




- தலைமை நிதி அலுவலர் மத்திய வங்கியின் நிதித் தகவல்களை சமர்ப்பித்தல், கணக்கியல் முறை ஏற்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்புடையவர் ஆவார்.
- ரிசர்வ் வங்கியின் இருப்பு நிலை அறிக்கை (Balance Sheet) நிர்வகிப்பவர் என்ற பொறுப்பில் அவர் இவ்வங்கியின் இந்திய மற்றும் அந்நிய முதலீடுகளையும் மேற்பார்வையிடுவார்.
- சுதா பாலகிருஷ்ணன் அரசின் வங்கிக் கணக்குத் துறைக்கு பொறுப்பானவர். இத்துறை அரசின் பரிவர்த்தனைகளான வரி வசூல் மற்றும் பணமளிப்புகள் போன்றவற்றை மேற்கொள்ளும்.
- வங்கியின் உட்புற கணக்கு மற்றும் வரவு செலவு கணக்குகள் தவிர, தலைமை நிதி அலுவலர் தமது பணியாளர்களுக்காக நிர்வகித்திடும் பரஸ்பர நிதி விகிதத்தை தீர்மானித்தல் போன்ற பெருநிறுவன யுக்திசார் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர் ஆவார்.
- மேலும் தலைமை நிதி அலுவலராக, அரசின் வரவு செலவுத் திட்டக் கணக்கீடுகளுக்கு முக்கிய தேவையாக உள்ள பங்காதாயங்களை (Dividends) ரிசர்வ் வங்கி அரசிடம் செலுத்தும் பணிக்கும் பொறுப்பானவர் ஆவார்.
- ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934ன் படி, மத்திய வங்கி வாராக் கடன்கள் மற்றும் சந்தேகத்துக்குரிய கடன்கள், சொத்துக்களுக்கான தேய்மானச் செலவுகள், பணியாளர்களுக்கு பணி மூப்புத் தொகை ஆகியவற்றுக்கு நிதியளித்த பிறகு மீதமுள்ளவற்றை அரசிடம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.
- ரிசர்வ் வங்கி ஜூலை முதல் ஜூன் வரை என்ற காலத்தை நிதியாண்டாக பின்பற்றுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சீனாவில் இரண்டாவது தகவல் தொழில்நுட்ப தாழ்வாரம்

- சீனாவின் வளர்ந்து வரும் மென்பொருள் சந்தையில் ஆதாயம் திரட்டிட தமது இரண்டாவது தகவல் தொழில்நுட்ப தாழ்வாரத்தை (information Technology Corridor) தென் மேற்கு சீனாவில் உள்ள குயியாங் மாகாணத்தில் இந்தியா ஏற்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் தலைசிறந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் விழிப்பாக இருந்த போதிலும் சீனாவின் மென்பொருள் சந்தை நழுவிக் கொண்டே வருகின்றது.
- மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான தேசிய அமைப்பு (National Association of Software and Services Companies - NASSCOM) சீனாவில் இரண்டாவது எண்ணியல் கூட்டுறவு வாய்ப்புகளுக்கான மையத்தை (Digital Collaborative opportunities Plaza - SIDCOP) ஏற்படுத்தியுள்ளது.
- இது சீனாவின் மிகப்பெரும் சந்தைக்குள் இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் ஊடுருவுதலுக்கான வாய்ப்பினை ஏற்படுத்தும்.
- கடந்த டிசம்பர் மாதம், நாஸ்காம் அமைப்பு சீனாவின் துறைமுக நகரமான டாலியன் நகரத்தில் இந்தியாவின் முதல் தகவல் தொழில் நுட்ப மையமான முதல் SIDCOP மையத்தை அங்கு ஏற்படுத்தியது.
- டாலியன் தாழ்வாரத்தின் கவனம் இணைய விவகாரங்கள் (Internet of Things - IOT) மீது உள்ள அதே சமயம் குயியாங் தாழ்வாரம் பெருந்தகவல் விவகாரங்கள் (Big Data) மீது கவனம் செலுத்தும்.
- இந்தியா சீனாவுடனான இருதரப்பு வர்த்தகப் பற்றாக்குறையை குறைப்பதற்காக, கடந்த பல ஆண்டுகளாக இந்திய தகவல் தொழில்நுட்ப மற்றும் மருந்தியல் நிறுவனங்களுக்கு சீனாவிற்குள்ளேயான சந்தை அனுமதியை சீனாவிடம் கேட்டு வருகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் பசுமையான கிரிக்கெட்

- 2018ஆம் ஆண்டு மே மாதம் 27ம் தேதி, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிறுவனமும் (United Nations Environment) இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமும் (Board of Control for Cricket of India - BCCI) இந்தியாவில் பசுமையான கிரிக்கெட்டை மேம்படுத்த ஒப்பந்தம் மேற்கொண்டு உள்ளன.
- இந்த ஒப்பந்தத்தின் மூலமாக பிசிசிஐ தமது போட்டிகளின் மூலம் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைத்திடும் வகையில் தமது நடவடிக்கைகளை பசுமையாக்கிடும் செயல்களில் கிரிக்கெட் ஆட்டக்காரர்களையும் ரசிகர்களையும் ஈடுபடுத்தும்.
- மேலும் பிசிசிஐ நாடு முழுவதும் மைதானங்களில் ஒற்றை உபயோக நெகிழி (பிளாஸ்டிக்) பொருட்களை முற்றிலுமாக நீக்குவதையும் திட்டமிட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

### அலகாபாத் - பெயர் மாற்றம்

- ❖ சங்கம நகரத்தில் உள்ள துறவிகள் மற்றும் சாதுக்களின் நீண்ட நாள் கோரிக்கையின் படி, அலகாபாத் நகரத்தின் பெயர் மாற்றம் பிரயாக் என்ற பெயருக்கு மாற்றப்பட உள்ளது.
- ❖ இந்த விஷயத்தில் ஒரு உறுதியான முடிவு மாநிலம் முழுக்க பாயும் மூன்று முக்கிய நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியவை சங்கமிக்கும் இப்புனித நகரத்தில் 2019 ஆண்டின் கும்ப மேளா நடத்தப்படுவதற்கு முன் எடுக்கப்படும்.
- ❖ இந்த நகரம் ஒவ்வொரு 12 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் கும்ப மேளாவிற்காக அறியப்படுகிறது.

### சூரிய ஒளி கழிப்பறைகள்

- ❖ இந்தியாவில் மூன்றாவதாகவும் வடகிழக்கில் முதலாவதாகவும் சூரிய ஒளியால் இயக்கப்படும் கழிப்பறைகளைக் கொண்டுள்ள மாநிலமாக மணிப்பூர் உருவெடுத்துள்ளது.



- ❖ இந்த கழிப்பறைகள் மணிப்பூரின் ஹையின்காங்கில் உள்ள இபுதோவு மாரிஜங் மலைப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ முன்னதாக, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் சூரிய ஒளிக் கழிப்பறைகளைக் கொண்டுள்ளன.
- ❖ முன்னதாக, விசாகப்பட்டின ரயில் நிலையம் 1000 கிலோவாட் சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகள் (Solar Photo Voltaic) நிறுவப்பட்டு முழுமையான ஆற்றல் சேமிப்பு ரயில் நிலையமாக உருவாகியுள்ளது.
- ❖ அதே போல, போபாலில் உள்ள தாத்யா தோப் மைதானம் முதலாவது முழுமையாக சூரிய ஒளியால் இயக்கப்படும் கிரிக்கெட் அல்லாத மைதானமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### பார்படோஸின் முதல் பெண் பிரதமர்

- கரீபியத் தீவுகளில் ஒன்றான பார்படோஸ் 1966ல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு முதல் முறையாக தனது முதல் பெண் பிரதமரை தேர்ந்தெடுத்துள்ளது.
- பார்படோஸ் தொழிலாளர் கட்சியின் தலைவரான மியா மோட்லி ஜனநாயக தொழிலாளர் கட்சிக்கு எதிராக மாபெரும் வெற்றியை பெற்றுள்ளார்.



## ராஷ்ட்ரிய சம்ஸ்கிருத் மகோத்சவ்

- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் ராஷ்ட்ரிய சம்ஸ்கிருத் மகோத்சவ் நிகழ்ச்சியின் 9வது பதிப்பு உத்தரகாண்ட் மாநிலத்தின் தெஹ்ரி நகரில் நடத்தப்பட்டது.
- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் "ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத்" என்ற நிகழ்ச்சியின் கீழ் 9வது ராஷ்ட்ரிய சம்ஸ்கிருதி மகோத்சவ்வை நடத்தியுள்ளது.
- கர்நாடகா, அரியானா, குஜராத், ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர், அசாம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்கள் கலை, நடனம், சமையற்கலை மற்றும் நாட்டுப்புற இசை ஆகியவற்றின் மூலமாக இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை பறைசாற்றிடுவர்.
- ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத் என்ற திட்டத்தின் அணி சேர்க்கையின் படி உத்தரகாண்டிற்கான ஜோடி என்று சேர்க்கப்பட்டுள்ள மாநிலம் கர்நாடகாவாகும். அதே வேளையில் நாடு முழுவதும் உள்ள கலைஞர்கள் திறமையை வெளிக்காட்டும் சமயத்தில் கர்நாடகாவிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- ராஷ்ட்ரிய சமஸ்கிருத் மகோத்சவ்வின் சிறப்பு முக்கியத்துவம் இந்தியக் கலாச்சாரத்தின் மிகுந்த பன்முகத் தன்மையையும் தனித்துவத்தையும் பறைசாற்றுவதோடு தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்திட மாநிலங்களுக்கிடையே கலாச்சார ஒருங்கிணைப்புகளை மேம்படுத்துவதும் ஆகும்.




## எவரெஸ்டில் வயதான பெண்

- 53 வயதான, முன்னாள் அழகி மற்றும் தொழிற்முனைவோரான, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த சங்கீதா பாகல் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறிய வயதான இந்திய பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.



- 1985ம் ஆண்டில் நடந்த மிஸ் இந்தியா இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற முன்னாள் அழகியான சங்கீதா சிந்தி பாகல் தற்சமயம் குர்கானில் வசித்து வருகிறார்.
- அவரது கணவர் அங்குர் பாகல் 2016ம் ஆண்டு மே மாதம் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறினார்.
- சங்கீதா பாகல் ஏற்கெனவே உலகத்தின் உயரமான ஏழு சிகரங்களில் ஆறின் மீது ஏறி வெற்றி கண்டுள்ளார்.
- அவர் 2011ம் ஆண்டு மே மாதம் 48 வயதாகும் போது ஏறிய பிரேமலதா அகர்வால் என்ற பெண்ணின் சாதனையை முறியடித்துள்ளார்.
- அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் இந்த ஆண்டில் மட்டும் ஆறு டஜன் இந்தியர்கள்

எவரெஸ்ட் சிகரத்தின் மீது மலையேறியுள்ளனர். இந்த வகையில் அமெரிக்காவில் மலையேறுபவர்களின் எண்ணிக்கைக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

- நேபாள பகுதியிலிருந்து எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறிய வகையில் இந்தியாவின் இளவயதுப் பெண்ணாக அரியானாவைச் சேர்ந்த 16 வயதுப் பெண் சிவாங்கி பதக் உருவெடுத்துள்ளார்.


# முக்கிய தினங்கள்

## இந்தி இதழியல் தினம்

- இந்தி பத்திரிகாரித திவஸ் எனப்படும் இந்தி இதழியல் தினம் இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 30ம் தேதி இந்தி மொழியில் பத்திரிக்கை தொடங்கியதை நினைவு கூரும் பொருட்டு அனுசரிக்கப்படுகின்றது.
- 1826ம் ஆண்டு இதே தேதியில், இந்தியாவின் முதல் இந்தி மொழி செய்தித் தாளான உகந்த மர்தாந்த் (உதயமாகும் சூரியன்) கல்கத்தாவிலிருந்து பண்டித ஜீகல் கிஷோர் சுக்லா என்வரால் பிரசுரிக்கப்ட்டது.
- இந்தி தினசரி பிராஜ் மற்றும் காரி மொழிகளில் வெளியிடப்பட ஆரம்பிக்கப்பட்டது.

## கோவா மாநில தினம்

- ஒவ்வொரு வருடமும் மே மாதம் 30ம் தேதி கோவா மாநில தினம் அனுசரிக்கப்படுகின்றது.




- நாட்டின் சிறிய மாநிலமான கோவா 1987ம் ஆண்டு மே மாதம் 30ம் தேதி அன்று டையூ மற்றும் டாமன் பகுதிகளோடு சேர்த்து தமக்களிக்கப்பட்டிருந்த ஒன்றியப் பிரதேசம் என்ற நிலையிலிருந்து தனி மாநிலத் தகுதியை பெற்றது.

- - - - - - - - - - - - - - -